கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

விசேட மீள்பரீட்சை கலைமாணித் தேர்வு (ஜனவரி 2013)

# ECO/S 2101 Advanced Economic Theory

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

01.(அ) பொருளியல் என்னும் எண்ணக்கருவினை வரையறுக்குக. அதன் தற்கால அபிவிருத்தி என்ன?

(05 புள்ளிகள்)

(ஆ) அல்பிரட் மாஷலினுடைய எல்லைப்பயன் ஆய்வினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) எல்லைப்பயன் ஆய்வின் வரையறைகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) பின்வரும் கேள்வித் தொழிற்பாட்டிலிருந்து விலை நெகிழ்ச்சி ஒன்றிற்கு சமனாக இருக்கும்போது விலை, வருமானம், தொகை என்பவற்றைக் காண்க.

$$Q = 100 - 5P$$
$$P = 20 - 0.2Q$$

(07 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02. (அ) சமபயன்வளைகோடு ஒன்றின் பிரதான இயல்புகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) சமபயன் வளைகோட்டு ஆய்வில் நுகர்வோன் சமநிலை எவ்வாறு பெறப்படும் என விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) சமபயன் வளைகோட்டைப் பயன்படுத்தி நுகர்வோன் நடத்தையை விளக்கும் கேள்விக் கோட்டை வரைக.

(06 புள்ளிகள்)

(ஈ) ஹிக்ஸ் (Hichs) அணுகு முறையில் பதிலீட்டு விளைவு மற்றும் வருமான விளைவு என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

03. (அ) மொத்த உற்பத்தி(TP), சராசரி உற்பத்தி (AP), எல்லை உற்பத்தி (MP) என்பவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

(06 புள்ளிகள்)

(ஆ) ஒரு நிறுவனத்தின் குறுங்கால உற்பத்தியில் அந்நிறுவனமானது எக்கட்டத்தில் உற்பத்தித் தீர்மானத்தை மேற்கொள்ளும் என்பதை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) நீண்டகால உற்பத்தித் தொழிற்பாட்டின்போது தொழிற்படும் விதிகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஈ) எல்லை தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் (MRTS) பற்றி விளக்குக.

(04 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

04. (அ) நிறைபோட்டிச் சந்தை ஒன்றின் பிரதான இயல்புகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) "ஒரு நிறைபோட்டி உற்பத்தியாளன் குறுங்காலத்தில் தனது உற்பத்தியை தொடர்ந்து நடத்துவதா அல்லது நிறுத்துவதா என்பதை தீர்மானிப்பதில் தனது நிறுவனத்தின் சராசரி மாறும் செலவை (AVC) கருத்திற் கொள்வான்." பொருத்தமான வரைபடத்தை பயன்படுத்தி இக்கூற்றை விளக்குக.

(07 புள்ளிகள்)

(இ) ஒரு தொழிலானது எவ்வாறு ஒரு தனியுரிமை அமைப்பாக மாறுகிறது என்பதை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஈ) தனியுரிமையில் விலைபேதப்படுத்தல் இடம்பெறத் தேவையான அடிப்படை நிபந்தனைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

05.(அ) குறுங்கால நிலையானசெலவுகளையும், மாறும்செலவுகளையும் உதாரணம் தந்து விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஆ) நீண்டகால சராசரிச்செலவினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(இ) நவீன செலவுக் கோட்பாட்டை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) TC = 190 + 53Q இங்கு TC = மொத்தச் செலவு Q= மொத்த வெளியீடு ஆகும். மேற்காட்டிய செலவுத் தொழிற்பாட்டின் அடிப்படையில் நிறுவனம் 100 அலகு பொருட்களை உற்பத்தி செய்தால் அதன் சராசரி செலவு, எல்லைச் செலவினை கணிப்பிடுக.

(09 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) உற்பத்தி விரிவுப்பாதை
(ஆ) நுகர்வோன் சமநிலை
(இ) வருமான நுகர்ச்சி வளைகோடு
(ஈ) எல்லைப் பதிலீட்டு வீதம்
(உ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி

(05x05 = 25 புள்ளிகள்)

***